ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (5–8–2016) வெள்ளிக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 5–27 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

–ஏதுமில்லை–

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

30. மானியக் கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016–2017. (தமிழ், ஆங்கிலம்)

31. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய நிதிநிலை செயலாக்கம், 2015–2016. (தமிழ், ஆங்கிலம்)

32. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் மக்கள் சாசனம், 2016–2017. (தமிழ், ஆங்கிலம்)

33. மானியக் கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016–2017. (தமிழ், ஆங்கிலம்)

34. பொதுப் பணித் துறையின் (கட்டடங்கள்) திட்டச் சாதனை, 2015–2016. (தமிழ், ஆங்கிலம்)

35. மானியக் கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016–2017. (தமிழ், ஆங்கிலம்)